புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை

No. 4/TD/DTC/PA/2014/23

புதுச்சேரி, தேதி: 28/1/14

செய்திக்குறிப்பு

புதுச்சேரியில் இயக்கப்படும் ஆட்டோக்களின் புதிய கட்டண விகிதங்கள் கடந்த 23.12.2013 முதல் அமுலுக்கு வந்துள்ளது. அதன்படி குறைந்தபட்சக் கட்டணமாக 1.8கி.மீ.க்கு ரூபாய் 25ம் அதிகப்படியாக ஒவ்வொரு கி.மீ.க்கும் ரூ15/-ம் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. காத்திருப்புக் கட்டணமாக 30 நிமிடத்திற்கு ரூ.20/-யும் இரவு நேரச் சேவைக்கு மேற்கண்ட கட்டணங்களுடன் 50 சதவிகிதம் கூடுதலாக வசூலிக்கவும் அரசாணை வெளியிடப்பட்டது.

மறு நிர்ணயம் செய்யப்பட்ட இக்கட்டண விகிதங்கள் உடனடியாக அமுலுக்கு வந்த போதிலும் ஆட்டோக்களில் பொருத்தப்பட்டுள்ள மீட்டர்களை மேற்கண்ட புதிய கட்டண விகிதங்களுக்கு ஏற்றவாறு திருத்திக்கொள்ள 60 நாட்கள் கால அவகாசம் அளித்து, அதுவரை புதிய கட்டண விகிதப்பட்டியலை ஒவ்வொரு ஆட்டோவிலும் பயணிகளின் பார்வைக்கு தெரியும்படியாக வைத்திருந்து அப்பட்டியலின்படி கட்டணம் வசூலிக்க வேண்டும் என்றும் மேற்படி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. ஆயினும் இது வரை மிகச் சில ஆட்டோக்களில் மட்டுமே புதிய கட்டண விகிதங்களுக்கேற்றவாறு ஆட்டோ மீட்டர்களில் மாற்றம் செய்துள்ளது தெரியவந்துள்ளது.

ஆட்டோ ஓட்டுனர்கள் உடனடியாகத் தமது ஆட்டோக்களில் உள்ள மீட்டர்களைத் திருத்தியமைத்து உரிய கட்டணங்களை மட்டுமே பயணிகளிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், ஆட்டோ மீட்டர்களைச் சரி செய்து கொள்ளாத ஆட்டோக்கள் மீதும் அரசு விதித்த கட்டணங்களுக்கு மேல் அதிகமாக வசூலிக்கும் ஆட்டோக்கள் மீதும் மோட்டார் வாகனச் சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திருத்தப்பட்ட மீட்டர் பொருத்தப்படாத ஆட்டோக்களுக்கு தகுதிச் சான்றிதழ் (Fitness Certificate) மறுக்கப்படும் என்றும் புதுச்சேரி போக்குவரத்துத் துறை தெரிவித்துக்கொள்கிறது.

GOVT OF PONDICHERRY ★ TRANSPORT DEPARTMENT ★

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்